DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 99/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | :*LW: 8* | *P.W.2* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ்குமார் | தொழில் | : | வியாபாரம் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | நடராஜன் | ஜாதி | : | |
| கிராமம் | : | உடுமலை | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | 44 |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.11.2025.

**2 காணொலி மூலம் ஆஜர். 1 எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டுள்ளது**

**முதல் விசாரணை**

நான் உடுமலையில் பழனியாண்டவர் நகரில் வசித்து வருகிறேன். உதிரி பாகங்கள் வியாபாரம் செய்து வருகிறேன். தேதிமாதம் வெகு நாட்கள் ஆனதால் ஞாபகம் இல்லை. பக்கத்து வீட்டை சேர்ந்த லட்சுமிஎன்பவரின் செயின் பறிக்கப்பட்டிருந்தது. நான் கடைக்க சென்ற போது அவர் கீழே விழுந்து கிடந்ததார். நாங்கள் முதல் உதவி செய்தோம். போலிசார் அங்கு வந்துவிசாரணை செய்தார்கள். அருகில் இருந்த சாட்சிககளை விசாரணை செய்தார்கள். சிசிடிவி கேமரா உள்ளதா என் கேட்டுகொண்டு இருந்தார்கள் சிறு பையன் ஒருவன் இருசக்கர வாகனத்தில் வந்ததாக கூறினார்கள் வேறு என்ன ஆய்வு செய்தார்கள் என எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அதில் என்னஎழுதினார்கள் என எனக்கு தெரியாது.போலிசார் வேறு என்ன ஆய்வுசெய்தார்கள் என எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழு்து தஎன்னுடையது தான்.அதில் உளளவிவரங்கள் தெரியாது–

முதலாவது கையெழுத்து மட்டும் அசாஆ. 2 என குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

லட்சுமிஎன்பவரின் செயின் பறிப்புக்காக அங்கு வந்து சம்பவ இடத்தை ஆய்வு செய்தார்கள் என்றும் அந்த இடத்தை வரைபடமாக எங்கள் முன்னால் வருகிறார்கள் என்றும் நாங்கள் அவர்களை ஆதரவாக கையெழுத்து செய்தோம் என்று விவரங்களை தெரிந்துதான் கையெழுத்து செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சென்று விட்டு அச்சமயம் வேறு என்ன ஆய்வு செய்தார்கள் என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை. சாட்சி முடித்துவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 99/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | :*LW:8* | *P.W.3* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தியாகராஜன் | தொழில் | : | பேப்பர் மில் வேலை |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மாணிக்கம் | ஜாதி | : | |
| கிராமம் | : | வயலூர் | இனம் | | |
| தாலூக்கா | : | | வயது | | |
| Mail ID | : | | Mobile No. | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.11.2025.

**<u>2 காணொலி மூலம் ஆஜர். 1 எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டுள்ளது</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வயலூர் விவி நகரில் உங்கள்வசித்து வருகிறேன். பேப்பர் மில்லில் வேலைக்கு சென்று வருகிறேன். சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக எங்கள் பேப்பரில் வேலை செய்யும் இந்திக்காரர் ஒருவரின் செல்போன் ஒன்றை அடித்து பிடித்து சென்று விட்டனர். அந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுக்கும்பொழுது சாமிநாதபுரம் காவல் நிலையத்திற்கு சென்றோம். அவர்கள் 10 நாட்கள் கழித்து வர சொன்னார்கள். பத்து நாள் கழித்து சென்ற பொழுது போலிசார் செல்போன் கிடைத்து விட்டதாக கூறினார்கள் அதற்கு ஆதரவாக கையெழுத்து கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். வேறு யாரையாவது என் முன்னால் போலீசார் விசாரித்து அவர்கள் எதையாவது எடுத்து ஆஜர் செய்தார்களா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது என் முன்னால் யாரையும் விசாரிக்கவில்லை. நான் ஒரு கையொப்பம் தான் செய்தேன். தற்சமயம்

ன்னிடம்காட்டப்படும் சாமிநாதபுரம் போலீசார் விசாரித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ 3** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சாமிநாதபுரம் போலீசார் கைப்பற்றிய மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது எதுவுமில்லை.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25 12 2017 ஆம் தேதி செல்போன் பிடுங்கி சென்ற வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பந்தப்பட்ட நபர்களை பிடித்து வைத்திருப்பதாகவும் அவர்களை விசாரிக்க வேண்டி இருப்பதால் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார் என்றும் அதன் பேரில் நாங்கள் காவல் நிலையம் சென்ற பொழுது என் முன்னால் சூர்ய ஜெகதீஷ் , சாபர் சாதிக்,அபுதாகிர் ஆகியோரை விசாரித்த போது செல்போனை பிடுங்கி சென்ற சம்பவத்தை தாங்கள் தான் செய்தோம் என்றும் இதுபோக 9. 11 .2017 ஆம் தேதி உடுமலை ஜீவா நகர் அருகில் வயதான ஒரு பெண்ணிடம் கழுத்தில் இருந்து தங்கச் செயினை அத்து பிடுங்கி சென்றதாகவும் கூறினார்கள் என்றும் அவர்கள் தன்னிச்சையாக கொடுத்த அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்னால் பதிவு செய்தார்கள் என்றும் ஜாபர் சாதிக் ஆஜர் படுத்திய சுமார் 2 1/2 பவுன் செயினை எங்கள் முன்னால் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் இது சம்பந்தமாக சாமிநாதபுரம் போலீசாரம் அதன் பிறகு உடுமலை போலீசாரும் எங்களை விசாரித்தார்கள் என்று நடந்த விபரத்தை கூறிவிட்டு தற்சமயம் என் முன்னால் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் கைப்பற்றுதல் மனிதரில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சி முடித்துவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 99/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | *LW: 11 P.W.4* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளங்கோ | தொழில் | : | டிரைவர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மோகன்ரா | ஜாதி | : | |
| கிராமம் | : | துங்காவி | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.11.2025.

**2 காணொலி மூலம் ஆஜர். 1 எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டுள்ளது**

**முதல் விசாரணை**

நான்உடுமலை துங்காவியில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன்.இந்த வழக்கு சம்மந்தமா க எனக்கு எதுவும்தெரியாது.என் முன்னால் போலிசார் யாரையாவது விசாரணை செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. என் முன்னால் யாராவது எந்த பொருளாவது எடுத்து ஆஜர் படுத்தினார்களே என்றால் அதைப் பற்றி உனக்கு எதுவும் தெரியாது வேறு எந்த காவல் நிலைய போலிசார் விசாரித்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கணியூர் போலீசார் விசாரித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அசாஆ 4 என குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் அதில் உள்ள விவரங்கள் தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக**

**கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.01.2018 ஆம் தேதி கடத்தூர் அர்ஜீனஸ்வரேர் கோவில் அருகில் திருடு போனதுசம்மந்தமாக கணியூர் போலிசார் திருடிய நபர்களை பிடித்து வைத்திருப்பதாகவும் அவர்களை விசாரிக்க வேண்டி இருப்பதால் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார் என்றும் அதன் பேரில் நாங்கள் காவல் நிலையம் சென்ற பொழுது என் முன்னால் சூர்ய ஜெகதீஷ் , ஆகியோரை விசாரித்த போதுஅர்ஜீனஸ்வரேர் கோவில் அருகில் திருடி சென்ற சம்பவத்தை தாங்கள் தான் செய்தோம் என்றும் இதுபோக 9. 11 .2017 ஆம் தேதி உடுமலை ஜீவா நகர் அருகில் வயதான ஒரு பெண்ணிடம் கழுத்தில் இருந்து தங்கச் செயினை அத்து பிடுங்கி சென்றதாகவும் கூறினார்கள் என்றும் அவர்கள் தன்னிச்சையாக கொடுத்த அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்னால் பதிவு செய்தார்கள் என்றும் சூர்யா ஜெகதீஸ் ஆஜர் படுத்திய சமபவத்திற்க பயன்படு்த்திய மோட்டார் பைக்கை எங்கள் முன்னால் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் இது சம்பந்தமாக கணியூர் போலீசாரும் அதன் பிறகு உடுமலை போலீசாரும் எங்களை விசாரித்தார்கள் என்று நடந்த விபரத்தை கூறிவிட்டு தற்சமயம் என் முன்னால் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சி முடித்துவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.